


பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் ஜெர்மனி நாட்டுக்கு கல்விச் சுற்றுலா சென்றுள்ள அரசுப் பள்ளி மாணவர்கள் அங்குள்ள உலகப் புகழ்பெற்ற BMW தொழில் நுட்ப அருங்காட்சியத்தினை பார்வையிட்டு ஆரம்பகாலம் முதல் இன்று வரையிலும் வாகன வடிவமைப்பில் ஏற்பட்டுள்ள மாற்றங்களையும் தொழில்நுட்ப வளர்ச்சியினையும் தெரிந்து கொண்டனர்.

### அமைச்சர் தா.மோ.அன்பரசன் சிறப்புரையாற்றுகிறார்!

# குன்றத்தூர் தெற்கு ஒன்றியக் கழக அவசர செயற்குழுக் கூட்டம்!

### படப்பை ஆ.மனோகரன் வேண்டுகோள்!

காஞ்சிபுரம், மே 29- குன்றத்தூர் தெற்கு ஒன்றிய தி.மு.க. அவசர செயற்குழு கூட்டம் இன்று (29.5.2025 -வியாழக்கிழமை) காலை 9.30 மணியளவில் படப்பை சி.என்.சி. மஹாலில் எனது படப்பை ஆ.மனோகரன் தலைமையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட செயலாளர் குறு- சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் சிறப்புரை யாற்றுகிறார்.

இதில் திருப்பெரும்புதூர் சட்டமன்ற தொகுதி மேற்பார்வையாளர் மீஞ்சூர் கே.ஜி.பாஸ்கர்சுந்தரம், ஒன்றிய குழுத்தலைவர் திருமதி. சரஸ்வதி மனோகரன், குன்றத்தூர் மத்திய ஒன்றிய பொறுப்பாளர் திருமுடி வாக்கம்.ஏ.மணி, குன்றத்தூர் வடக்கு ஒன்றிய செயலாளர் ஏ.வந்தே மாத ரம், ஒன்றிய குழு துணைதலைவர் திருமதி உமாமகேஸ்வரிவந்தேமாதரம், ஒன்றிய கழக நிர்வாகி கள் வ.நந்தகோபால், சி. பார்த்த சாரதி, மு.ராஜேந்திரன், ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் மாவட்ட ஒன்றிய அணிகளின் நிர்வாகிகள், கிளைக் கழக செயலாளர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் உள்ளிட்ட அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்:ஜூன் 3 முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் விழா, 2026 சட்டமன்ற தேர்தல், கழக வளர்ச்சி பணி.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.




தஞ்சாவூர் மத்திய மாவட்டத்திற்குப் புதிதாக நியமிக்கப்பட்ட ஒன்றிய நகர பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்களுக்கான அறிமுகக் கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் துரை சந்திரசேகர். டி.கே.ஜி. நீலமேகம் எம்.எல்.ஏ. மேயர் சண்முகம் ஆகியோர் ஆற்றவேண்டிய கழகப்பணிகள் குறித்த ஆலோசனைகளை வழங்கினர். உடன் இளையராஜா, இளமாறன், முகில்வேந்தன், ஒன்றிய நகர கழக மற்றும் இளைஞர் அணி பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

### சட்ட நடைமுறையோ விசாரணை நடைமுறையோ தெரியாமல்

# அரைவேக்காட்டுத்தனமாக அறிக்கை விடுக்கும் எடப்பாடி பழனிசாமி!

### அமைச்சர் எஸ்.ரகுபதி அறிக்கை!



**சென்னை, மே 29 - சட்டரீதியான நடைமுறையோ விசாரணை நடைமுறையோ தெரியாத எடப்பாடி பழனிசாமி தாம் ஒரு அரைவேக்காடு என்பதை அவரே அம்பலப்படுத்திக்கொள்கிறார் என்று அமைச்சர் ரகுபதி வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.**

அவரது அறிக்கை வருமாறு:-

சட்டரீதியான நடைமுறையோ விசாரணை நடைமுறையோ தெரியாத எடப்பாடி பழனிசாமி தாம் ஒரு அரைவேக்காடு என்பதை அவரே அம்பலப்படுத்திக் கொள்கிறார்.

உயர்நீதிமன்றம் சிறப்பு புலனாய்வுக் குழு விசாரணைக்கு உத்தரவிட்டது உண்மை தான். அந்த SIT தமிழ்நாடு காவல்துறைகோ திமுக அரசுக்கோ தொடர்பு இல்லாததா? அந்த SIT வேறு மாநில அதிகாரிகளோ ஒன்றிய அரசின் அதிகாரிகளோ இல்லை. அவர்கள் தமிழ்நாடு அரசின் காவல்துறை தானே? அண்ணா பல்கலை. மாணவி வழக்கில் SIT குழு சிறப்பாக செயல்பட்டது என்றால் திமுக ஆட்சியில் காவல்துறை சிறப்பாக செயல்பட்டது என்று தான் பொருள்.

அண்ணா பல்கலை. மாணவி வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட ஞானசேகரனை உடனடியாக கைது செய்து, நீதிமன்றக் காவலில் வைத்தது திமுக அரசின் காவல்துறை.

அவர் ஜாமின் பெறாத வகையில் நீதிமன்றத்தில் வாதாடியது திமுக அரசின் வழக்கறிஞர்கள்.

வழக்கை உடனடியாக விசாரிக்க நீதிமன்றம் நியமித்த SIT குழு பெண் அதிகாரிகள் மூவரும் அவர்களுக்கு துணையாக இருந்த விசாரணை குழுவும் திமுக அரசின் காவல்துறையின் கீழ் பணியாற்றும் அதிகாரிகள்.

இப்படி, திமுக அரசின் கீழ் செயல்படும் காவல்துறையால் தான் ஐந்தே மாதத்தில் விசாரணை முடிக்கப்பட்டு நீதிமன்றம் ஞானசேகரனை குற்றவாளி என தீர்ப்பளித்துள்ளது என்று சொன்னால் எடப்பாடி பழனிசாமி ஏன் எரிகிறது? உடல் முழுவதும் இவ்வளவு எரிவது நல்லதல்ல, மருத்துவரை அணுகுவது எடப்பாடி பழனிசாமிக்கு நல்லது.

பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமை சம்பவத்தில் குற்றம்சாட்டப்பட்டவர்கள் அதிமுகவினர், விசாரணை நடத்தி முக்கிய குற்றவாளிகளை கைது செய்தது சிபிஐ. தீர்ப்பு வழங்கியது சிபிஐ நீதிமன்றம். சாட்சிகள் பிறழ் சாட்சியமாக மாறாமல் காத்தது திமுக அரசின் காவல் துறை என்ற போதிலும் பொள்ளாச்சி பாலியல் வழக்கில் குற்றவாளிகளுக்கு தாம் தான் காரணம் வாய்க்கூசாமல் எடப்பாடி பழனிசாமி கூறியதை பார்த்து சந்தி சிரித்தது என்பது தானே உண்மை.

அண்ணா பல்கலை. வழக்கில் நீதிமன்றத்தின் மேற்பார்வையில் விசாரணை நடந்தது என்பதற்காக நீதிமன்றம் தான் பாராட்டுக்குரியது எடப்பாடி பழனிசாமி சொல்வதும், விசாரித்து ஆதாரங்களை சமர்பித்த காவல்துறையினருக்கும், குற்றத்தை நிரூபிக்க வாதாடிய வழக்கறிஞர்களுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை பாராட்டுக்குரியவர்கள் இல்லை என சொல்வதும் அவரின் அறியாமையை காட்டுகிறது.

“அரசியல் குறுக்கீடு இன்றி நடக்க வேண்டிய SIT விசாரணையை நீங்கள் Influence செய்தீர்கள் என்று வாக்குமூலம் அளிக்கிறீர்களா?” என்று முதலமைச்சரைப் பார்த்து கேள்வி எழுப்பும் எடப்பாடி பழனிசாமி, அதற்கான ஆதாரத்தை SIT நியமித்த நீதிமன்றத்திடம் ஓரிரு நாட்களுக்குள் கொடுத்துவிட்டு, சொல்லும் செயலும் ஒன்றே மானமுள்ளவர் பழனிசாமி என்று நிரூபிக்க வேண்டும். இல்லாவிட்டால் ஒரு மானங்கெட்ட பிறவி பழனிசாமி என ஊடகங்கள் முன்பு ஒப்புக்கொள்ள வேண்டும். அதை செய்வீரா?...

அதிமுக ஆட்சி அமைந்தால் “அந்த சார்கள்?” யார் என்பதை கண்டுபிடிப்போம் என எந்த அடிப்படை அறிவோ வெட்கவோ இல்லாமல் சொல்கிறார் எடப்பாடி பழனிசாமி.

பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமை, சாத்தான்குளம் தந்தை மகன் கொலை, கொடநாடு கொலை, கொள்ளை... போன்ற அதிமுக ஆட்சியில் நடந்த குற்றங்களின் விசாரணையை எடப்பாடி பழனிசாமி ஆட்சி எப்படி கையாண்டது என்பது உலகத்திற்கே தெரியும்.

அண்ணா பல்கலை. வழக்கை விசாரித்த SIT குழு நீதிமன்றத்தின் முழு மேற்பார்வையில் செயல்பட்டது, அதுகூட திமுக அரசின் காவல்துறைக்கு உட்பட்டது என்றாலும் விசாரணை நீதிமன்றமும் மேற்பார்வை பார்த்த சென்னை உயர்நீதிமன்றமும் திமுக ஆட்சிக்கு உட்பட்டவை இல்லையே?... அந்த சார் யார்? என்பதற்கு ஆதாரம் இருந்தால் நேரடியாக நீதிமன்றத்தில் சமர்பித்து சந்தேகத்தை இப்போதே உறுதி செய்யலாமே?

எந்த ஆதாரமும் கையில் இல்லாமல் கடந்த 5 மாதமாக புலம்பியது போதும் எடப்பாடி பழனிசாமி அவர்களே? குற்றம்சாட்டப்பட்ட நபருக்கு தண்டனை வாங்கி தரும் வேலையை திமுக அரசு சிறப்பாக செய்துவிட்டது. நீங்கள் புலம்பாமல் அமைதியாக தூங்குங்கள்...

பொள்ளாச்சி பாலியல் வழக்கில் அதிமுக பிரமுகர்களுக்கு தொடர்பு இருந்ததை திமுக பொறுப்புள்ள எதிர்க்கட்சியாக அம்பலப்படுத்தியால், காழ்ப்புணர்ச்சியாக அண்ணா பல்கலை. மாணவி வழக்கில் திமுக பிரமுகர்களுக்கு தொடர்பு இருப்பதாக கூறி “யார் அந்த சார்?” என சமூக வலைதளங்கள் மூலம் அரசியல் செய்த எடப்பாடி பழனிசாமி, அதற்கான ஆதாரங்களை விசாரணை நீதிமன்றத்தில் கொடுத்து நிரூபித்திருக்க வேண்டாமா? ஏன் ஆதாரங்களை இதுவரை தரவில்லை? அவதூறுக்கு ஆதாரம் இருந்தால் தானே தர முடியும்.

இவ்வாறு அமைச்சர் எஸ். ரகுபதி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



அண்ணா நகர் தொகுதி 100 A வட்டத்தில் ஜோதியம்மாள் நகர் தெலுங்கு சந்தில் புதிய பல்நோக்கு கட்டிடம் கட்டும் பணி ரூ.20 லட்சம் திட்ட மதிப்பீட்டில் தொகுதி மேப்பாட்டு நிதியில் இருந்து அடிக்கல் நாட்டி தொடங்கி வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் எம்.கே.மோகன் எம்.எல்.ஏ. பகுதி செயலாளர் ச.பரம சிவம், வசந்தி பரமசிவம் எம்.சி., வட்ட கழக செயலாளர் கு.பாபு , அதிகாரிகள், பொதுமக்கள் திரளாக பங்கேற்றனர்.


# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

அன்பும் அறனுமாய் இருந்து எங்களை விட்டுப்பிரிந்தாய்
உன் நினைவுகளே எங்களுக்கு வழிகாட்டும் ஒளிவிளக்கு !



திருமதி. M.A. பரமேஸ்வரி M.A.,B.L.,

என்றும் நீங்கா நினைவுகளுடன்

ஆ.இராசா M.P
துணைப்பொதுச்செயலாளர் தி.மு.க

செல்வி.மயூரி இராசா MSc., LLM (UK)

மற்றும்

குடும்பத்தினர் & உறவினர்கள்
வேலூர் கிராமம், பெரம்பலூர் மாவட்டம்